# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 20.09.2019 | 1) 2016–17ம் நிதி ஆண்டுக்கான ஆண்டுக் கணக்குகள் கணக்கு கலந்தாலோசகர் மூலம் தயார் செய்யப்பட்டு துணை இயக்குநர் மாநகராட்சி உடன் நிகழ்வு தணிக்கைக்கு அனுப்பப்பட்டு , ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதர மாநகராட்சிகளை போன்று இம்மாநகராட்சியில் உதவி ஆணையர் (கணக்குகள்) மற்றும் கணக்கு அலுவலர் நிலையிலான பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாத நிலையில் ஒவ்வொரு ஆண்டும் அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக ஆண்டு கணக்குகள் தயார் செய்வதற்கு கணக்கு கலந்தாலோசகர் மூலம் தான் ஆண்டு கணக்குகள் தயார் செய்யப்பட்டு மாநகராட்சி உயர் அலுவலர்களால் சரிபார்க்கப்பட்டு தொடர்ந்து தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.<br>மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுகூட்டத்தில் மத்திய அரசின் 14வது நிதிக்குழு செயல்பட்டு மானியம் பெறுவதற்கு உரிய காலத்திற்குள் ஒவ்வொரு ஆண்டும் ஆண்டு கணக்குகள் தயார் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு நியமனம் செய்யப்படும் கணக்கு கலந்தாலோசகர்களுக்கு மாநகராட்சி பொது நிதியில் இருந்து ரூ. 75000/– வழங்கிடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி 2016–17ம் ஆண்டு கணக்குகள் தயார் செய்து வழங்கியமைக்காக திரு. நீலச்சந்திரன் அவர்களுக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டு ரூ. 75000/– வழங்கப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தில் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண். பி1/00559/17 | **166)**அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2) இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட புதிய பேருந்து நிலையத்தினுள் உள்ள சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கான கட்டண வசூல் செய்யும் உரிமம் மூன்றாண்டுக்கு ஒரு முறையிலான குத்தகை / ஏல அடிப்படையில் ஏல விதிமுறைகளின்படி, அதிகப்படியான ஏலத்தொகை கோரும் ஏலதாரருக்கு குத்தகை உரிமையாணை வழங்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு பயன்பட்டு வந்தது. மேற்படி ஏல விதிமுறைகளின்படி மேற்படி சைக்கிள் நிறுத்தும் இடத்திற்கான கட்டணம் வசூல் செய்யும் உரிமையாணை 2017 –2019 வரையிலான காலத்திற்கு முடிவு பெற்றதை தொடர்ந்து தொடர்ச்சியாக மேற்படி சைக்கிள் நிறுத்தும் இடத்திற்கான கட்டண உரிமம் ஏலம் விடுவதற்காக கடந்த ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட ஏலத்தொகையினை விட கூடுதலாக ஏலத்தொகை நிர்ணயம் செய்யும் பொருட்டு தற்போதைய சந்தை மதிப்பீட்டில் ஏலத்தொகை நிர்ணயம் செய்த மாநகராட்சி வருவாய் அலுவலர்களை கொண்ட குழு அமைத்து உத்திரவிடப்பட்டது.<br>மேற்படி குழுவானது மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்திலுள்ள சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கான கட்டண வசூல் செய்யும் உரிமம் மூன்றாண்டுகளுக்கு முறையாக குத்தகை / ஏல அடிப்படையில் ஏல விதிமுறைகளின்படி அதிகப்படியான ஏல தொகை கோரும் ஏலதாரருக்கு குத்தகை உரிமையாணை வழங்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ள நிலையில் கடந்த இரண்டு மற்றும் மூன்றாண்டு குத்தகை ஆய்வு செய்யப்பட்டது 2016–20 ஆண்டில் ரூ 7,17,178/–ம் நடப்பு நிதியாண்டில் 2019–2022 ரூ.8,24,950/– ஆக சுமாராக 15 வீதம் உயர்வு செய்து குத்தகை கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி குத்தகைக்கான தொகை மற்றும் பொது மக்கள் பயன்பாடு குறித்தான விரிவான அறிக்கையினை மாநகராட்சி அலுவலர்கள் அடங்கிய குழுவினர் சமர்ப்பித்த அறிக்கையில் மேற்படி குத்தகை தொகை மிகக் குறைவாக இருப்பதாகவும், தூத்துக்குடியில் இருந்து வெளியூர் செல்வதற்கு ஏதுவான புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக அமையப்பெற்றுள்ளதால் சராசரியாக நாள் 1க்கு 2000 இரு சக்கர வாகனமும் , 200 சைக்கிள்களும் வந்து செல்வதாகவும், இதன் பேரில், தோராயமாக மாதத்திற்கு ரூ. 1,92,000/– எனவும் வருடத்திற்கு ரூ. 23,00,000/– வருமானம் வரும் எனவும் கணக்கிடப் பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேலும் குத்தகைதாரர் மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையினை விட 100 சதவீதம் கூடுதலாக பொது மக்களிடம் வசூல் செய்யப்பட்டு வந்துள்ளது. நேரடி ஆய்வின் போது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் பொது மக்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் அவ்வப்போது வாக்குவாதங்கள், சிறு சண்டைகள் ஏற்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக பொதுமக்கள் அலுவலகத்திற்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் புகார்கள் தொடர்ந்து தெரிவித்து வந்துள்ளார்கள். எனவே மாநகராட்சி வருவாய் பிரிவு அலுவலர்கள் சம்பந்தப்பட்ட குத்தகைதாரரிடம் பொது மக்களிடமிருந்து புகார்கள் வராமல் பார்த்துக்கொள்ளவும், இல்லையெனில் குத்தகை இனத்தினை ரத்து செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பலமுறை எச்சரிக்கப்பட்டது. மேலும் குத்தகைதாரர் பொது மக்கள் | 167)அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | எளிதில் வந்து செல்ல ஏதுவாக பாதைகள் அமைத்து கொடுக்கவும் இருந்து வருவதால் பொதுமக்கள் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். மேற்கண்ட இடத்தில் பொது மக்கள் எளிதில் வந்து செல்லும் வகையில் உரிய பாதைகள் அமைத்து கொடுத்து கணினி மூலம் வசூல் செய்யும் பணி மேற்கொள்ளும்பட்சத்தில் பொது மக்களுக்கு பயனுள்ளதாக அமையும். மேற்படி குத்தகை இனத்தினை ஏலத்தில் இருந்து விடுவித்து மாநகராட்சி நிர்வாகமே பராமரித்து வர மாமன்ற தீர்மான எண். 142 நாள் 31.07.2019ன் படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.<br>இந்நிலையில், தற்போது கணினி மூலம் வசூல் பணி மேற்கொள்ளும் நிலையில் கூடுதல் செலவினத்தை சரிகட்டும் வகையில் புதிய பேருந்து நிலைய வாகன காப்பகத்தில் ரூ. 3/–லிருந்து இரு சக்கர வாகனத்திற்கு ரூ. 5/– எனவும், சைக்கிள் நிறுத்துவதற்கு ரூ. 2/–லிருந்து ரூ. 3/–என நிர்ணயம் செய்து கணனி மூலம் வசூல் செய்யும் பணியினை மேற்கொள்ளும் பட்சத்தில் மாநகராட்சிக்கு சராசரியாக ஆண்டுக்கு ரூ. 36,00,000/– (ரூபாய் முப்பத்தி ஆறு லட்சம்) வருவாய் வரும். எனவே மாநகராட்சி பொது மக்கள் நலன் கருதி குத்தகை இனத்தினை மாநகராட்சி மூலம் மேற்கண்ட கட்டண விகிதத்தில் நிர்ணயம் செய்து வசூல் செய்யவும், கீழ்க்கண்ட இரு இனங்களுக்கு கட்டணத்தில் விலக்களிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அ) தூத்துக்குடி மாநகராட்சி காவல் துறையின் இருசக்கர ரோந்து வாகனங்கள் மற்றும்<br>ஆ)மாநகராட்சியின் புதிய பேருந்து நிலையத்திலுள்ள குத்தகை கடைகளிலுள்ள ஒரு சொந்த வாகனங்களுக்கு மட்டும் விலக்களிக்கலாம்.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். அ16/00029/19 | |
| | 3) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி Uniform City Signage Progrmme which consist of Supply and Erection of Retro Reflective (Type XI) Signboard at Major Junction of Thoothukudi Corporation பணிக்காக ரூ. 2,95,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 27.08.2019 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது. 28.08.2019ம் தேதி அன்று தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டது.<br>1) M/S.Sri Balaji Associates & SBA Infratech Services (Pvt.Ltd IV) Chennai/<br>2)M/S. Hariway lines Pvt. Ltd. Bangalore<br>3)M/S.Rali Engineering works Thoothukudi<br><br>மேற்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்கள் மட்டும் தொழில்நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண். 247 நாள் 03.09.2019ல் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்டது. | 168)அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப் பட்டது.<br>அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக் கப்பட்டது. |

1)M/S.Sri Balaji Associates & SBA Infratech Services (Pvt.Ltd IV) Chennai/
2)M/S. Hariway lines Pvt. Ltd. Bangalore

மேற்படி தொழில்நுட்ப தகுதிபெற்ற இரண்டு நிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகள் 10.09.2019ஆம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்ட விலைவிகிதம் வருமாறு

1)M/S.Sri Balaji Associates & SBA Infratech Services (Pvt. Ltd IV) Chennai மதிப்பீட்டை விட 7.86% அதிகம் (ரூ. 2,73,92,856.00)
2)M/S. Hariway lines Pvt. Ltd. Bangalore மதிப்பீட்டை விட 8.85% அதிகம் (ரூ. 2,76,43,635.00)

இதில் வரிசை எண். 1 நிறுவனத்தார் மதிப்பீட்டை விட 7.86% சதவீதம் அதிகமாக வழங்கப்பட்டுள்ளதன் பேரில் மேற்படி L1 நிறுவனத்தாரிடம் 13.09.2019 அன்று விலைகுறைப்பு செய்து கொடுக்க கோரப்பட்டதன் அடிப்படையில் அந்நிறுவனத்தார் 16.09.2019ஆம் தேதியன்று விலைகுறைப்பு கடிதம் கொடுத்துள்ளதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் விகிதம் வருமாறு

1) M/S.Sri Balaji Associates & SBA Infratech Services (Pvt.Ltd IV) Chennai மதிப்பீட்டை விட 2.50% அதிகம் (ரூ. 2,60,31,332.00)

2)M/S. Hariway lines Pvt. Ltd. Bangalore மதிப்பீட்டை விட 8.85% அதிகம் (ரூ. 2,76,43,635.00)

M/S.Sri Balaji Associates & SBA Infratech Services (Pvt.Ltd IV) Chennai நிறுவனத்தின் விலை குறைப்பு ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டை விட 2.50% அதிகம் (ரூ. 2,60,31,332.00) அதிகம் ஆகும். மேலும் பொறியியல் கையேடு பிரிவு II விதி எண் 272–ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத் தொகையினை விட கூடுதலாக 5% வரை மாமன்றம் அனுமதிக்க அதிகாரம் வழங்கி குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி L1 விலைவிகித ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத்தொகையினை விட 2.50% மட்டுமே அதிகமாக வழங்கப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஸ்மார்ட்சிட்டி திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)ஸ்மார்ட் சிட்டி திட்ட பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்
2)மதிப்பீட்டை விட 2.50% அதிகமாக கொடுத்த M/S.Sri Balaji Associates & SBA Infratech Services (Pvt.Ltd IV) Chennai ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

419F/18-19

| | | |
|---|---|---|
| | **4)**தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் – திடக்கழிவு மேலாண்மை பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பேருந்து நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்களை பராமரித்தல், வடகிழக்கு பருவமழையை எதிர் நோக்கி மழைநீர் தேங்குமிடங்கள் மற்றும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகளுக்குத் தேவையான கிருமிநாசினிகள் சுண்ணாம்புத்தூள். **32**டன் பிளிச்சிங் பவுடர் **16**டன் கருப்பு பினாயில் – **1000**லிட்டர் நறுமண பினாயில் –**300**லிட்டர் ஹார்ப்பிக் . **100**லிட்டர் மற்றும் அந்துருண்டை–**5**கிலோ ஆகிவற்றை ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்வதற்கும் மேற்படி கிருமிநாசினிகளுக்கான செலவினத்தினை (உத்தேச செலவுத்தொகை ரூ. **13** லட்சம்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/3722/17 | **169)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | **5)**தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட வார்டு பகுதிகளின் தெருக்களில் உள்ள மின் கம்பங்களில் தெருவிளக்குகள் இல்லாமல் இருப்பதால் இரவு நேரங்களில்பொது மக்கள் சென்று வர மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதனை ஆய்வு செய்து உடன் தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்க ஆணையர் அவர்கள் அறிவுறுத்தியதன் பேரில் கீழ்க்கண்ட தெருக்களில் உள்ள மின் கம்பங்களில் புதிய தெருவிளக்குகள் அமைக்கவும், மின் வாரியத்திற்கு உரிய விண்ணப்பம் செய்து நடவடிக்கை எடுக்கவும் இதற்காகும் மின்வாரிய மதிப்பீட்டு கேட்பு தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **170)** அலுவலகக் குறிப்பு **1** அனுமதிக்கப்பட்டது<br>**2)**அலுவலகக் குறிப்பு **2** அனுமதி வழங்கப்பட்டது. |

| வரிசை எண் | தெருவின் பெயர் | வார்டு எண் | புதியதாக மின்வாரியம் மூலம் அமைக்கப்பட வேண்டிய விளக்குகள் | புதியதாக குழல் விளக்கு பொருத்திகள் மட்டும் அமைக்க வேண்டிய எண்ணிக்கை | மொத்த விளக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | ஆதிபராசக்தி நகர் | 1 | 44 | – | 44 |
| 2 | கிருஷ்ணராஜபுரம் கீழ் பகுதி | 17 | 11 | – | 34 |
| 3 | அய்யர் விளை | | 9 | – | |
| 4 | பாக்கியநாதன் விளை | | 14 | – | |
| 5 | தெற்கு சம்பந்தமூர்த்தி தெரு | 27 | – | 3 | 3 |
| 6 | கதிர்வேல் நகர் | 34 | 10 | – | 35 |
| 7 | மடத்தூர் மெயின் ரோடு | | 2 | 11 | |
| 8 | சவேரியர் காலனி | | – | 3 | |
| 9 | முருகேசன் நகர் | | 1 | 8 | |
| 10 | மணி நகர் | 41 | – | 5 | 5 |
| 11 | சங்கர் காலனி | 42 | – | 10 | 10 |
| 12 | பக்கிள்புரம் | 46 | 1 | – | 2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | பூபாலராயர்புரம் | | 1 | – | |
| 14 | பொன்னான்டி நகர் | 52 | 3 | – | 3 |
| 15 | வி.இ. ரோடு (போஸ்ட் ஆபீஸ் முதல் சுப்பையா வித்யாலயம் பள்ளி வரை) | 24 | – | 6 | 30 |
| | | 27 | | 19 | |
| | | 40 | | 5 | |
| 16 | மேல பெரியகாட்டன் ரோடு (பாளை ரோடு பழைய பேருந்து நிலையம் முதல் தாலுகா ஆபீஸ் வரை) | 26 | – | 13 | 32 |
| | | 27 | | 6 | |
| | | 40 | | 13 | |
| 17 | ஜார்ஜ் ரோடு (பெல் ஹோட்டல் முதல் Agsar cem Roundana வரை) | 31 | – | 7 | 28 |
| | | 32 | | 12 | |
| | | 33 | | 9 | |
| 18 | போல்பேட்டை கிழக்கு மெயின் ரோடு (60அடி ரோடு) | 4 | 5 | – | 8 |
| | போல்பேட்டை கிழக்கு முதல் குறுக்கு தெரு | | 3 | | |
| | மொத்தம் | | 104 | 130 | 234 |
| | **அலுவலகக் குறிப்பு**<br>1) பொதுமக்கள் நலன் கருதி மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br>2) இப்பணிக்கு தேவைப்படும் LED விளக்கு பொருத்திகளை விநியோகித்து பொருத்தும் பணிக்கு ஆகும் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 2979/2019/E3) | | | | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.20.09.2019